S. Nadarajah
Publisher

பக்கங்கள் 4

விலை சதம் 5

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமீயாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆ புரட்டாசி மீ 22உ புதன்கிழமை — Colombo, October, 8, 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 22 | இதழ் 127

உலக அரசியலில் ஒரு பெரும் அதிர்ச்சி

பெல்கிரேடில் நிறுவப்பட்ட உலக கமியூனிஸ்ட் பிரசார ஸ்தாபன நிகழ்ச்சி

அமரிக்க,பிரிட்டிஷ்,அந்நியநாட்டுக்கொள்கைகளை ரஷியப் பத்திரிகைகள் தாக்குகின்றன

பிரான்ஸையும் இத்தாலியையும் ரஷியா விழுங்கிவிடும்

ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் கலக்கம்

கிரேக்க நிலைமைபற்றி ரஷியப் பிரதிநிதி எச்சரிக்கை

பாரிஸ், அக். 6

நவம்பர் 25-ம் தேதி லண்டனில் ஆரம்பமாகும் நான்கு நேச வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் ரஷியாவும் கலந்துகொள்ளு மென்று இன்று சோவியத் சர்க்கார் பிரஞ்சு சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மகாநாட்டில்தான் ஜெர்மனியின் எதிர்காலம்பற்றியும் ஜெர்மன் சமாதான உடன்படிக்கைபற்றியும் தீர்மானம் செய்யப்படும்.

இத்தாலி குடியேற்ற நாடுகள்

லண்டன், அக். 6

இத்தாலிய குடியேற்ற நாடுகளின் எதிர்கால சம்பந்தமாக அவைகளில் அக்கறையுடைய நாடுகளையும் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்றும் அப்படிப்பட்ட நாடுகளில் பாக்கிஸ்தானையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், நான்கு நேச வல்லரசுகளின் உதவி அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதிநிதி தெரிவித்த கோரிக்கையை இன்று ரஷியபிரதிநிதி ஏற்றுக்கொண்டார். இத்தாலிய சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் தான் அக்கறையுள்ள நாடுகளாகக் கருதப்பட வேண்டுமென்றும், அந்த சமயம் பாக்கிஸதான் இல்லையே என்றும் முதலாவது சோவியத் பிரதிநிதி ஆட்சேபனையைக் கிளப்பினார். ஆனால் பிறகு பிரிட்டிஷ் பிரதிநிதி நிலைமையை விளக்கிய பின் பாக்கிஸதானைச் சேர்த்துக்கொள்ள ரஷியப் பிரதிநிதி இணங்கினார்.

சர்வதேச கமியூனிஸ்ட் ஸ்தாபனம்

வாஷிங்டன், அக். 6

போலந்தில் நடைபெற்ற 9 ஐரோப்பிய நாடுகளின் கமியூனிஸட் மகாநாட்டைப் பற்றியும் பெல்கிரேடில் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேச கமியூனிஸட் ஸ்தாபனததைப்பற்றியும் முழு விவரத்தை அறிய மாஸகோவிலிருந்து இங்கு வரும் அமெரிக்க ஸ்தானிகர் ஸமித்தின் வரவை அமெரிக்க அந்நிய நாட்டுக் காரியாலயத்தார் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கு உலகத்துடன் அரசியல் யுத்தம் நடத்தவே சோவியத் ரஷியா இந்த சர்வதேச கமியூனிஸ்ட் ஸதாபனத்தை நிறுவியிருக்கிறதென்று இங்கு கருதப்படுகிறது. இதனால் ஐரோப்பாவில் அரசியல் பொருளாதார விஷயங்களில் பெரும் பிளவுகளுண்டாகு மென்றும் அமெரிக்க-ரஷியா தகராறு அதிகரிக்குமென்றும் ஐக்கிய தேச ஸதாபனத்தில் நான்கு வல்லரசுகளின் ஒத்துழைப்புக்குப் பாதகம் ஏற்படுமென்றும் கருதப்படுகிறது.

பிரான்ஸ், இத்தாலி, போலந்து, செக்கோஸலவகியா, ரஷியா ஆகிய நாடுகள் உட்பட 9 நாடுகள் போலந்து மகாநாட்டில் கலந்து முடிவு செய்து பெல்கிரேட் நகரில் பழைய கோமின்டர்னைப்போல சர்வதேசகமியூனிஸட் பிரசார ஸதாபனத்தை நிறுவியிருக்கின்றன. இந்த ஸ்தாபனம் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அந்நிய நாட்டு மந்திரிகளின் கொள்கைகளைப் பலமாகத் தாக்கின.

பிரான்ஸின் நடுக்கம்

பிரஞ்சுத் தலைவரான ஜெனரல் டிகால் ஞாயிற்றுக்கிழமையன்று வின்சன்ஸ் என்னுமிடத்தில் பேசியபோது, ஐரோப்பாவில் மூன்றில் இரண்டு பங்கு சோவியத் ஆதிக்கத்திலிருப்பதாகவும் அந்த ஆதிக்கம் மேற்கே பரவிக்கொண்டு வருவதாகவும் பிரான்சுக்கும் வந்து விடுமென்று அஞ்சுவதாகவும் தெரிவித்தார்.

"கமியூனிஸ்ட் கட்சி ஒழிக"

வாஷிங்டன், அக். 5

நேற்று முடிவுற்ற ஜரிஷ் யுத்தப் பிரமுகர் சங்க மகாநாட்டில் கீழ்க் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:-

அமெரிக்காவில் கமியூனிஸ்ட் கட்சியை சட்ட விரோதமாக்க வேண்டும். தொழிலாளர்களும் உத்தியோகஸதர்களும் ஐக்கிய அமெரிக்க சர்க்காரால் வேலைக்கெடுத்துக்கொள்ளப்படும் போது அவர்கள் தங்களுக்கு கமியூனிஸட் கொள்கையில் பற்றுக் கிடையாதென்று சத்தியக் கடுதாசி எழுதித்தர வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதிநிதி தாக்கப்படுகிறார்

லண்டன், அக். 5

ஐக்கிய தேச ஸதாபனத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதி மாக்னில் ரஷியாவைத் தாக்கிப் பேசியதற்குப் பதில் விடுத்து மாஸகோவிலிருந்து எஸ். மார்ஷல் என்னும் ஆங்கிலேயர் லண்டன் டைம்ஸ பத்திரிகைக்கு எழுதி

(4-ம் பக்கம் பார்க்க)

பிரதம மந்திரி வீட்டுக்கருகே வெடிகுண்டு

பிரான்ஸில் சம்பவம்

பாரிஸ், அக். 6

இன்றுகாலை தென்பிரான்ஸிலுள்ள பிரதம மந்திரி ராமடீர் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தோட்டத்தில் ஒருவெடிகுண்டு எறியப்பட்டு வெடித்தது. சேதமெதுவுமில்லை. பிரதம மந்திரி குண்டு வெடிப்பதற்கு முன்னரே பாரிசுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். எறிந்தபேர்வழி இன்னும் கைது செய்யப்படவில்லை. அரசியல் காரணமாக இருக்காது என்று சொல்லப்படுகிறது. (ராய்ட்டர்)

கொக்கடிச் சோலை கொலை வழக்கு

எதிரி கடைசியில் பிடிபட்டான்

மட்டக்களப்பு, அக். 5

ஐந்துமாத காலமாகப் போலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த கொக்கடிச் சோலை அமரட்பொடி தேவப்பொடி மேற்குக் கரையோரமுள்ள நெடியமடுவில் உள்ள ஒரு வாடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

மேற்படி பேர்வழி பெரியதம்பி பிள்ளையன் என்னும் பிள்ளையன்குட்டியைச் சுட்டுக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளான். கைது செய்யப்பட்டபொழுது தான் போலிஸார் முன் ஆஜராகவே எண்ணியிருந்ததாக குறிப்பிடடான். கைதுசெய்யப்பட்ட சமயத்தில் அவன் தூங்கிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. (ந-நி)

ஏகாதசி விரதமிருந்தால் இதர நாடுகளின் உதவி தேவையிராது

உணவு நெருக்கடியைப் போக்க மகாத்மாவின் உபதேசம்

அமைதியை நிலைநாட்டி தேசத்தைப் பலப்படுத்த பண்டித நேருவின் கர்ஜனை

பாக்கிஸ்தானிலிருந்து இந்தியா வரும் 75 மைல் நீளமுள்ள அகதிகளின் அணிவரிசை யாத்திரை

புதுடில்லி, அக். 6

இன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவின் உணவு நிலைமை மிக முக்கியமானவிஷயமாகும் இவ்விஷயத்தில் தவறு ஏற்படின் அதனால் லட்சக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கும்படியும் மரிக்கும்படியும் நேரிடும். நாட்டிலுள்ள நிலங்களில் பயிரிடக்கூடிய ஒவ்வொரு அங்குலநிலத்திலும் உணவுப் பொருட்களைச் சாகுபடி செய்ய ஒவ்வொருவரும் முயற்சிக்க பணம் சம்பாதிக்கும் பொருட்டு யற்றப் பயிர்களைசாகுபடிசெய்வதை மட்டுப்படுத்த வேண்டும். ஹிந்துக்கள் ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பதுபோல் நாட்டு மக்கள் மாதமிருமுறை உண்ணாவிரதமிருந்தால உணவுப் பொருளுக்காக நாம் அந்நிய நாடுகளின் உதவியை எதிர் பார்க்க வேண்டியதில்லை. ஐரோப்பிய மக்கள் பட்டினியைப்போக்குவதற்காக அமெரிக்கர்கள் உணவைச் சிக்கனமாகச் செலவு செய்யும்படி ஜனாதிபதி ஆரம்பித்துள்ள பிரசாரம் போற்றத்தக்கது. அவர் லாபத்தை குறிக்கோளாகக்கொண்டு அந்தரங்கநோக்கத்துடன் இவ்விதம் செய்கிறார் என்பதை நம்ப நான் தயாராக இல்லை.

லட்சம் ஜனக்கூட்டத்தில் நேருஜி முழக்கம்

புதுடில்லி, அக். 6

இன்று புதுடில்லியில் ஒரு பெரும் வெட்டவெளியில் ஒரு லட்சம் ஜனங்களுக்குமேல் கூடியிருந்த பொதுக்கூட்டத்தில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டிதநேரு பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடைபெறும் சம்பவங்களும் நடவடிக்கைகளும் அபாயகரமானவை. அவைகள் இப்பொழுது அதிகமாகப் பரவியிருக்கின்றன இதனால் உறுதியான அரசாங்கத்தின் அஸதிவாரமே ஆட்டங் கொடுக்கும். இந்தியாவின் பொருளாதார நிலைமை சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது நாட்டின் பொருளாதார நிலைமை சீர்குலையின் நாட்டின் அரசியல் சுதந்திரத்தால் ஒரு பயனும் கிடையாது. இந்தியாவின செல்வத்தைப் பெருக்கி அதை சமமாக மக்களுக்குக் கிடைக்கும்படிபங்கிட வேண்டுமானால் நாட்டில் பூரணமான அமைதி நிலைபெற வேண்டும்.

பலமுண்டு

நேற்றைக்கு முன்தினம் பண்டிதநேரு காங்கிரஸ ஊழியர்களின் கூட்டத்தில் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:- பாக்கிஸ்தானால் இந்தியாவுக்குத் தொல்லையும் அபாயமும் நேரிடக் கூடுமென்று சிலர் அஞ்சுகிறார்கள். புதிய அரசாங்கமான பாக்கிஸ்தான் யுத்தம் புரிவதற்கு சக்தியுடையதல்லவென்பதைஇவர்கள்அறியவில்லை. அப்படியாக யுத்தம் நேரிட்டாலும்கூட அதைச்சமாளிக்க இந்தியாவுக்குப் போதிய பலமிருக்கிறது. பாக்கிஸதானுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் நேரிட்டால் பாக்கிஸதான் முழுகிவிடும்; இந்தியா பலவீன

(4-ம் பக்கம் பார்க்க)

"புதிய மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை"

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும்

எதிர்க் கட்சிகளின் ஏற்பாடு

(நமது அரசியல் நிருபர்.)

கொழும்பு, அக். 8

பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தவர்கள், வரும் நவம்பர் மாதம் 25-ம் தேதி கூடவிருக்கும் முதலாவது பிரதிநிதிகள் சபைக்கூட்டத்தில் சேனநாயக்கா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கவர்னரின் பிரசங்கத்தின் பின்பு கொண்டுவரவேண்டுமென்று ஏகமனதாகத் திங்கட்கிழமை இரவு குருணாக்கல் பிரதிநிதி திரு. எச். ஸ்ரீநிசங்கா வீட்டில் நடந்த எதிர்க் கட்சிகள் கூட்டத்தில் தீர்மானித்துள்ளார்கள்.

எதிர்க்கட்சிகளுள் கூடிய பிரதிநிதிகளைக் கொண்ட லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் ஆவான்வெலைப் பிரதிநிதியுமாகிய டாக்டர் என். எம். பெரேராவே இத்தீர்மானத்தைக் கொண்டுவருவாரென்றும் அறியப்படுகிறது. இத்தீர்மானத்தை லங்கா சமசமாஜ் கட்சி பொல்ஷிவிக்லெனினிஸட் கட்சி, தமிழ்க் காங்கிரஸ கட்சி, இந்தியன் காங்கிரஸ கட்சி, கமியூனிஸட் கட்சி, லங்கா சுயாதீனக்கட்சி ஆகிய சகல எதிர்க்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஆதரிப்பதாக அறியப்படுகிறது.

திங்கடகிழமை இரவு நடந்த எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் கூட்டம் இரவு எட்டு மணி தொடக்கம் ஒரு மணி வரைக்கும் நடந்தது.

சேனநாயக்கா அரசாங்கத்தை எதிர்ப்பதால் ஆறுகட்சிப் பிரதிநிதிகளும் ஏகமனதான தீர்மானங்கொண்டுள்ளனர்.

டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா, சகல எதிர்க் கட்சிப் பிரதிநிதிகளிடையேயும் இப்பொழுது ஒற்றுமையான அபிப்பிராயம் நிலவுவதாகவே எமக்குத் தெரிவித்துள்ளார்.

டாக்டர் என்.எம். பெரேராவும் திரு. சேனநாயக்காவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒரு அரசாங்கம் ஏற்படுத்துவதில் ஒற்றுமை பூண்டுள்ளதாகவே தெரிகின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள், சென்ற திங்கட்கிழமை நடந்த எதிர்க்கட்சிகள் கூட்டம் மிகவும் திருப்திகரமானதாகவே இருந்ததென்றும், எதிர்க்கட்சித் தலைவரை ஏற்படுத்துவதில் இனி அதிக கஷ்டம்இராதென்றும் கூறியுள்ளார்.

தேசியக் கொடி

வாளேந்திய சிங்கக் கொடிகள்50,000தயாரிக்கப்பட்டு இலங்கைக்கு வந்துள்ளனவென்றும் அச்சின்னமுடைய கொடிதான் இலங்கையின் தேசியக் கொடியென்றும், நேற்றுக் காலையில் வெளிவந்த ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகையின் செய்தி கொழும்பில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதைக் கண்டிப்பதற்குப் பல பொதுக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

முன்னேற்றக் கொள்கையையும் தேச நலனையும் கருதும் பல சிங்களப் பிரமுகர்களே இச்செயலைக் கண்டிக்கின்றனர்.

ஒரு பிரபல சிங்கள புறக்டர், இந்தியாவை பின்பற்றி சகல ஜாதியினரும் ஒப்பமுடிந்த ஒரு தேசியக் கொடியை ஏற்படுத்துவதுதான் முறை என்று எமக்குக் கூறினார்.

பிரதமருக்கு இடம்

திங்கட்கிழமை மாலையில் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா, தமது காரியாலயத்தில் பிரவேசஞ் செய்துள்ளார். அவருக்கு காரியாலயம் பழைய "செக்ரடேரியட்;" கட்டிடத்தில் தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரதமருக்கு இக்கட்டிடத்தைத் திருத்தியமைத்துக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு நான்கு லட்சம் ரூபாய்கள் பிடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரதம மந்திரி வாசஞ் செய்வதற்கு திருத்தியமைக்கப்படும் கொள்ளுப்பிட்டியிலுள்ள "டெம்பிள்ட்ரீஸ்"என்னும் கட்டிடத்திற்கும், பழைய அரசாங்க சபையைப் புதிய பிரதிநிதிகள் சபையாகத்திருத்தியமைப்பதற்கும் மூன்றரை லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுவதாக அறியப்படுகிறது.

பிரதம மந்திரியின் காரியாலயம் உள்ள பழைய செக்ரட்டேரியட் கட்டிடத்திற்தான் கபினட் மந்திரி சபை கூடும் இன்று நடக்கவிருக்கும் மந்திரி சபைக் கூட்டத்திற்கு முன் னேற்பாடான சகல காரியங்களும் நேற்றே செய்யப்பட்டுளளன.

பிரதம மந்திரியின் காரியாலயத்தில் இப்பொழுது ஒரு மேசையும், நாலு ஐந்து கதிரைகளும், ஒன்றும் வைக்கப்படாத புத்தக அலுமாரிகளுமே காணப்படுகின்றன.

பஸ் பயணத்தில் பணப்பெட்டி மறைந்தது

கொழும்பு, அக். 7

அரநாயகா மவுண்ட் காரிமல் எஸ்டேட் சூப்ரண்ட் திரு. டி. எம். டி. சிலவா கொழும்பிலிருந்து அரநாயகாவுக்கு பஸ்ஸில் பயணம் செய்யும்போது 3500 ரூபாய் இருந்த அவரது பெட்டி காணாமற்போய்விட்டதென்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தை அவர் கம்பஹா போலிசுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

மோட்டார் விபத்து

கொழும்பு, அக். 7

நேற்று பிற்பகல் கொள்ளுப்பிட்டியில் "டெம்பிள் ட்ரீஸ்" என்னுமிடத்திற்கு எதிரே ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டது. ஒரு பீரங்கி மோட்டார் லொறி ஒரு மோட்டார் காருடன் மோதியதால் காரின் முன் பாகம் சேதமடைந்தது. காரின் டிரைவர் மூர்ச்சையடைந்தார். அவர் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்.

மூட்டை தூக்கும் தொழிலாளி

கொழும்பு, அக். 7

பேலியகொடையைச் சேர்ந்த ராமலிங்கம் என்ற தொழிலாளி ஒரு வண்டியில் இருந்து சாமான்களை இறக்கி ஓர்கடைக்குக் கொண்டு போகும்போது கால் தடுக்கிக் கீழே விழுந்து அதன் பயனாக உடனே மாண்டு போனான்.

பிரேத விசாரணை நடத்திய நகர விசாரிப்பாளர், மேற்படி மரணம் விபத்தின் காரணமாகச் சம்பவித்தது என்று தீர்ப்பளித்தார்.

உங்கள் இடங்களில் — மங்களா தர்பன்

மெய்கண்டான்
RSGO: 7472
திருக்குறட் கலண்டர்

புதிய கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பெற்றது.

1948-ம் வருட மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்	5-10-47 க்கு முன் ¼ பங்கு முற்பணத்துடன் கூடியஆடருக்கு 12 க்கு	100 க்கு	5-10-47 க்குப்பின் 1-11-47 க்கு முன் ¼ பங்கு முற்பண ஆடருக்கு 12 க்கு	100 க்கு
No. 1. சிவப்பு	18-00	145-00	19-00	150-00
No. 1. கறுப்பு	16-50	130-00	17-60	135-00
முதுமொழிக் கலண்டர் No.2.	8-50	65-00	9-00	70-00
No. 1. டயறி (1 பக்கம் 1 நாள்)	16-00	—	16-50	—
No. 2. டயறி (திருக்குறள் டயறி)	8-50	—	9-00	—

சில்லறை விலை: No. 1. சிவப்பு 1 க்கு 1-75
No 1. கறுப்பு ,, 1-55

இன்றே ஆர்டர் செய்யுங்கள் பிந்தினால் கிடைப்பதரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஜூ புரட்டாசி மீ 22உ
புதன்கிழமை

இதுவா தேசியக் கொடி?

நவீன துட்டகமுனு தன் இராச்சியத்தை. ஆரம்பிப்பதற்கு ஆயத்தங்கள் செய்து வருகின்றார். பராளுமன்றத் தேர்தலில் தனக்கு உதவியாக இருக்கக்கூடிய நீலன்களைத் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தனுப்பும்படி கேட்டார். வட மாகாணத் தமிழரிடம் இது பலிக்கவில்லை. ஆகவே தமிழ் உதிரிப் பேர்வழிகளில் இருவரை நீலன்களாக மாற்றினார். தமிழ் மக்களைப்பற்றி இனி பொருட்படுத்தத் தேவையில்லை என்று ஆகாச வசனியில் சப்தித்தார். தமக்கேற்ற மந்திரிகளையும் நியமித்தும் விட்டார். ஆகவே இனி வேண்டியது படைகள் போலத்தான் தோற்றுகின்றது.

இப்பொழுது வாளேந்திய சிங்கக் கொடிகளும் வந்து விட்டதாக நேற்று வெளிவந்த "டெயிலி நியூஸ்" பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகின்றது. இக்கொடிதான் இலங்கையின் தேசியக் கொடியென்றும், அரசாங்க சபை கலைக்கப்படுவதற்கு முன் இலங்கைத் தேசியக் கொடியில் பொறிக்கப்பட வேண்டிய சின்னங்களைப்பற்றி விவாதங்கள் நடத்திய பொழுது வாளேந்தி நிற்கும் சிங்க உருவமே தகுதியான சின்னமென்று கூறப்பட்ட ஆலோசனைக்கே மிகுதியான ஆதரவிருந்ததாகவும் மேலும் அச்செய்தி கூறுகின்றது.

நாமும் இலங்கையில்தான் வாழ்ந்து வருகின்றோம், ஆனால் இந்த விதமாக தேசியக் கொடி சம்பந்தமாக ஏதாவது விவாதங்கள் எங்காவது நடந்ததைக் கேள்விப்பட்டதில்லை இவ்வபாண்டப் பொய்யால் பாமர மக்களை ஒருவேளை ஏமாற்றலாம், படித்தவர்களையும் பத்திரிகைகள் ஏமாற்ற நினைப்பது எவ்வளவு கேவலம்!

இந்நாட்டில், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று பெருஞ் சமூகத்தினர் வாழ்கின்றனர். இம் மூன்று சமூகத்தினரும் ஒப்பக்கூடிய கொடியையல்லவா ஏற்படுத்துவது தர்மமும் முறையுமாகும்.

தமிழ் மக்கள் தம் கலாசாரத்தையும், பண்பையும், கல்வியையும் காப்பாற்ற முற்பட்டால் வகுப்பு வாதிகள் என்று பட்டை நாமஞ் சூட்டுகிறார் திரு. சேனநாயககா. ஆனால் தாம் வாளேந்திய சிங்கக் கொடியே இலங்கையின் தேசியக் கொடியென இரகசியத்தில் தயாரித்துப் பின் பகிரங்கமாக இலங்கை மக்களின் பூரண ஆதரவைப் பெற்ற கொடி சிங்கக் கொடிதான் எனக் கூறுவது வகுப்புவாதமல்லாமல், வேறு என்னவாதம் என்றுதான் நாம் கேட்கிறோம். இந்நாட்டில் மற்றும் ஜாதி சமூகத்தினர் உயிருடன் இல்லையென்பதை யல்லவா இச்செயல் குறிக்கின்றது.

சென்ற அரசாங்க சபையிலும் இதையே சிங்கள அரசியல் வாதிகள் செய்தார்கள. இலங்கை-இலங்கையருக்கு; இலங்கையர் யார்? சிங்களமக்களே, எனக் கூறி சர்வ சிங்கள மந்திரி சபையமைத்து வகுப்புவாதத் தீயைக் கக்கினார்கள். இப்பொழுதாவது தங்கள் வகுப்புவாதத்தைக் கை விடுவார்கள் என்று எண்ணியிருந்தோம். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. அதே போன்று திரு. சேனநாயக்காவும் அவர் கூட்டத்தாரும் சிங்கள இராச்சியம் ஸ்தாபிப்பதென்றே கங்கணங்கட்டி நிற்கின்றனர். இவர்கள் கொடியுடன் நிற்க மாட்டார்கள். தமிழ் மக்களை இந்நாட்டிலிருந்து வெருட்டி ஓட்டவும் முற்படுவார் போன்றே காணப்படுகிறது. இவ்வகுப்பு வாதக் கண்டர்களால் நடத்தப்படும் ஒரு சிங்களப் பத்திரிகை "சிங்களவர் இந்நாட்டை விட்டுச் சென்றால், வேறு புகலிடமில்லை, ஆயின் தமிழர்களோ அவர்கள் அண்ணன்மார் தென்னிந்தியாவில் இருக்கிறார்கள்" எனக் கூறுவதே இவர்கள் எண்ணத்திற்கு சான்று பகருகின்றது.

தமிழ் மக்கள் இனியும் வாழா விருக்கல் கூடாது. தனி ஒரு ஜாதியினரின் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியே இலங்கையின் தேசியக் கொடியாக ஆக்கப்படுவதைப் பாராளுமன்றத்திலும், வெளியேயும் மக்கள் வெறுக்கின்றனர் என்பதை வெளிப்படையாகக் காட்ட வேண்டும். சிறுபான்மையரின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுவதை எதிர்த்து பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் முதலாவது கூட்டத்திலேயே சேனநாயக்கா அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

இந்நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருமென்பதை திரு. சேனநாயக்கா அறிபாமலில்லை. அறிந்தே பாராளுமன்ற அலுவல் கூட்டங்களை இவ்வருடத்தில் நடைபெறவொட்டாது ஒத்திப்போட்டு வைக்கத்தக்க தாகக் கருமங்கள் செய்கின்றார். சிறுபான்மைப் பொதுமக்களே உஷார்! தமிழர், முஸ்லிம்கள் ஆகியவரின பிரதிநிதிகள் சேனநாயக்கா அரசாங்கத்தின் தான்தோன்றிச் செயல்களை சிறுபான்மை மக்கள் வெறுக்கின்றனர் என்பதைப் பட்டவர்த்தனமாக வெளியிடும்படி சிறுபான்மை மக்கள் செய்வித்தல் வேண்டும்.

தேசியக் கொடி ஒன்று அமைப்பதாயிருந்தால் இலங்கையில் வதியும் சகல ஜாதியினரின் தலைவரும் ஒருமித்துக் கூடி விவாதித்து, ஆவன செய்தலே முறையாகும். இதை விட்டு ஜாதித் திமிர்கொண்டு செய்யும் எச்செயலும் நன்மை பயக்காது என்பதை நாம் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அழகிய மங்கையைச் சுட்ட ஆடவன்

பட்டப்பகலில் படுகொலை முயற்சி

லண்டன் மாநகர் நடுவே நடந்த சம்பவம்

லண்டன், அக். 6

லண்டன் நகரின் நடுவே பட்டப்பகலில் பிக்காடிலியில் ஓர் மனிதன் 26-வயதுள்ள லாகாம் டேஎன்னும் பெயருடைய அழகிய பெண்ணொருவள்வரால் சுட்டுக்கொல்ல முயன்றான். மூன்று தடவை அவன், பெண்ணை நோக்கிச் சுட்டான். பார்க்லி ஹோட்டலுக்கு வெளியேயுள்ள தள பாதையில் அப்பெண் படுகாயமுற்றுச் சுருண்டு விழுந்தாள். ஏராளமான ஜனங்கள் தெருவில் நின்றுகொண்டு இக்கோர சம்பவத்தைக் கண்ணுற்றார்கள். சுட்டமனிதன் ஓடிப்போகாமல் அப்பெண்ணினருகேயே நின்றுகொண்டிருந்தான். போலிஸார் வந்து அவனைக் கைதுசெய்துகொண்டு போனார்கள். சுடப்பட்ட பெண் அபாய நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டாள். (ராய்ட்டர்)

வெறிகொண்ட நீக்ரோ கைது

துப்பாக்கியை எடுத்து கண்டபடி சுட்டான்

மெம்பிஸ், அக். 6

இன்று இங்குள்ள சிறையில் கைதியாக இருந்த ஒரு நீக்ரோ வெறிகொண்டு துப்பாக்கியை எடுத்துக் கண்டபடி சுட்டதால், மற்றொரு நீக்ரோ கைது கொல்லப்பட்டான். இரு உதவி காவலாளர்கள் காயம் அடைந்தனர். பிறகு அவன் அடக்கப்பட்டான்.

(ராய்ட்டர்)

மலேயாவுக்குச் செல்லும் கடிதங்கள்

கொழும்பு, அக். 7

அக்டோபர் 9-ம் தேதி காலை 3 மணி வரை மலேயா, சைகோன் செல்லும் கடிதங்கள் தபால் மத்திய நிலையத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரிவினையை ஆதரித்தது பெருந் தவறு

இந்தியாவில் முஸ்லிம் லீக் வேண்டாம்

முஸ்லிம்அனைவரும் காங்கிரஸில் சேர்வதே புத்திசாலித்தனம்

அபாயத்தை உணர்ந்த முஸ்லிம் தலைவர்கள் அறை கூவுகின்றனர்

நாகபுரி, அக். 3

மத்திய மாகாண பீரார் மாஜி மந்திரி ஜனாப் எம். எம் ஹாஸன் விடுத்துள்ள அறிக்கையின் சாரமாவது:-

"இந்திய யூனியனிலும், பாக்கிஸ்தானிலும உள்ள முஸ்லிம்களைப் பற்றியும் ஹிந்துக்களைப் பற்றியும பண்டித ஜவஹர்லால் நேரு ஒளிவு மறைவின்றி தைரியமாக விடுத்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பாகிஸ்தான் கிளர்ச்சியை ஆதரித்தது பெரிய பைத்தியக்காரத்தனம் என்பதை இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம்கள் இப்பொழுது உணர்ந்திருக்கவேண்டும், அவர்களுடைய தலைவர் ஜின்னாவின் இரு சமுதாயக் கொள்கையை இனி மறந்து விடவேண்டும் என்பதையும் அவர்கள் தெரிந்திருப்பார்கள். இந்திய யூனியன், பாக்கிஸ்தான் ஆகிய இரண்டினிடமும் அவர்களுக்கு ஏக காலத்தில் விசுவாசம் இருக்கமுடியாது. பல தலைமுறைகளாக அவர்கள் வாழ்ந்துவந்த இந்திய யூனியனிடமதான் அவர்களுக்கு மனப்பூர்வமான விசுவாசம் இருக்கவேண்டும்".

"இந்திய யூனியனில் உள்ள முஸ்லிம் லீக் ஸ்தாபனங்களை உடனே கலைத்துவிடு அவர்கள் அனைவரும் ஒரே கும்பலாகக் காங்கிரஸில் சேருவதுதான் பொருத்தம். பொதுநலனை முன்னிட்டு மற்ற சிறுபான்மையினருடனும் ஹிந்து சகோதரர்களுடனும் அவர்கள் சோந்து நேத்தாஜியின் ராணுவத்தைப் போல உழைக்கவேண்டும்.

"இந்திய யூனியனில் உள்ள முஸ்லிம்கள் தங்கள் சொந்த நன்மையை முன்னிட்டே இந்திய யூனியனின் செழிப்புக்காகப் பாடுபடவேண்டுவது அவசியம். அப்பொழுதுதான் அவர்களுடைய சொந்த நலன்கள் பாதுகாக்கப்படும். இந்திய யூனியனிடம் பூரணமாக விசுவாசம் செலுத்தமுடியாத முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேறி பாக்கிஸ்தானுக்குப் போய்விடவேண்டும்".

பஞ்சாப்பிலும் டில்லியிலும் மற்ற இடங்களிலும் நடந்த மிருகத்தனமான செய்கைகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மக்களுக்கு சீக்கிரம் புத்தி வந்து சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுமென்று நம்புகிறேன்.

மத்திய மாகாணத்திலுள்ள முஸலிம்களின் சொத்துக்களை சர்க்கார் காப்பாற்றியே தீருவார்கள் என்று நம்புகிறேன். ஆகையால் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறவேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"இந்த நெருக்கடியான சமயத்தில் பரஸபர நல்லெண்ணமும் சகிப்புத்தன்மையும் நிறைந்த சூழ் நிலையை ஏற்படுத்த அரும்பாடுபட்டுவரும் மஹாத்மா காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் என்னுடைய எளிய மரியாதையைச் செலுத்த விரும்புகிறேன்".

மனித சமூகத்தில் அமைதி ஏற்படுவதற்கு நம்பிக்கை ஊட்டக்கூடியவர் மஹாத்மா காந்தி ஒருவர்தான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். நம் நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் ஏற்படவும் இந்தியாவும் பாக்கிஸ்தானும் மீண்டும் ஒன்று சேரவும் செய்ய அவர் நீண்ட நாள் ஜீவித்திருக்கவேண்டுமென்று நாம அனைவரும் கடவுளைப் பிரார்த்திப்போம்.

ஜனாப் அன்ஸாரி வேண்டுகோள்

கல்கத்தா, அக் 5

இந்தியாவுடன் மீண்டும் ஒன்றுசேருவதில் முஸ்லிம்கள் தான் வழிகாட்டவேண்டும். இந்தியாவைப் பிரித்ததன்மூலம் முஸலிம்கள் ஒரு பெரிய பாவம் செய்துவிட்டார்கள். பிரிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் ஒன்றுசேர்ப்பதற்கான முயற்சிகளையும் தியாகங்களையும் முஸ்லிம்களே செய்தால்தான் இந்தப் பாவத்தைப் போக்கடிக்க முடியும்" என்று அ. இ. மோமீன் மகாநாட்டுத் தலைவரும் பீஹாரில் நிவாரண சீரமைப்பு மந்திரியுமான ஜனாப் அப்துல் கையூம் அன்ஸாரி பாக்கிஸ்தானிலுள்ள முஸலிம்களுக்கு இன்று ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியில் ஜனாப் அன்ஸாரி மேலும் கூறியதாவது:-

இரு பகுதிகளும் பிரிக்கப்பட்டேயிருந்தால் இந்தியாவிலுள்ள முஸலிம்கள் நிச்சயமாக பிரதிகூலமான நிலையிலிருப்பர். இவ்வாறு ஏற்படாமல் தடுப்பது அவர்களுடைய கடமை. இந்திய பிரிவினையை ஆதரித்து பெரும் தவறு செய்துவிட்டோமென்று முஸலிம்கள் இப்போது நன்றாக உணருகிறார்கள்.

தற்போதுள்ள நிலைமை எவ்வளவு மோசமாக உள்ளதென்பதை உணர்ந்து ஒரு சுதந்திர நாட்டிலுள்ள பிரஜைகள் என்ற முறையில் நடந்துகொள்ளும்படி ஒவ்வொரு ஹிந்து, முஸலிம், சீக்கியரையும் நான் கேட்டுக்கொள்கிறேன் இந்தியா ஆசியாவின் தலைவியாகவும் உலகத்தின் தலைவியாகவும் ஆகவேண்டுமென்றால் இந்த சகோதரப் படுகொலை நிறுத்தப்படவேண்டும். அதிருஷ்டவசமாக காந்திஜி நமக்கு வழிகாட்டியுள்ளார். நமது சக்திக்கு முடிந்தவரையில் அவருடைய வழியைப் பின்பற்றினால் நமக்கு மிகவும் நல்லது.

ஜனாப். முஸ்லிம் எம் எல். ஏ அறைகூவல்

லக்ஷ்மணபுரி, அக். 4

"இந்திய யூனியனிலுள்ள நாலரை கோடி முஸலிம்களும் தங்களுக்கு நேர்ந்துள்ள கதியைப் பற்றி நன்றாக சிந்தித்துப் பார்த்து லீக் தலைமையை உதறித் தள்ளி அதைப் பகிரங்கமாக கண்டிக்க முன்வரவேண்டும் நிரபராதியான முஸலிம்களை லீக் தலைவர்கள் தவறான வழிகாட்டி அவர்களுடைய உயிர், உடைமைகளுக்கு நாசம் தேடித்தருகிறார்கள். இந்திய யூனியனிடம் விசுவாசமாக இருப்பதாக முஸலிம்கள் சொன்னால் மட்டும் போதாது; பல மாகாணங்களில் வந்து தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு முஸ்லிம்கள் தகுந்த உதவிசெய்ய முன்வர வேண்டும்" என்று ஐக்கிய மாகாண எம். எல். ஏ யான ஜனாப் எடிஷாம் மகம்மது அலி ஒரு அறிக்கையில் கூறுகிறார்

சோஷியலிஸ்ட் தலைவர் முழக்கம்

அலஹாபாத், அக் 5

அகில இந்திய காங்கிரஸ கமிட்டி வெளிநாட்டு இலாகா காரியதரிசி திரு சத்தியசரண் சாஸதிரி தலைமையில் நடந்த ஒரு கூட்டத்தில் சோஷலிஸ்டுத் தலைவர் அசார்ய நரேந்திர தேவ் பேசுகையில், "முஸலிம்களை முஸலிம் லீக் தவறான வழியில் இழுத்துச் சென்றுவிட்டது. ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க காங்கிரஸ முயன்று வருவதாக முஸலிம் லீகர்கள் சொன்னார்கள். நியாயமான முறையில் பாக்கிஸ்தானுக்காக அவர்கள் போராடியிருந்தால் ஆக்ஷேபனையில்லை. துவேஷத்தைப் பிரசாரப் செய்து, இந்தியர்களுக்கே பெரும் தீங்கு இழைத்துவிட்டனர் அவர்கள் துவேஷ விதையைப் போட்டார்கள். அது விஷம்போல் பரவி வேலை செய்யத் தொடங்கிவிட்டது இது பெரிதும் வருந்தத்தக்கவிஷயம்" என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய சர்க்காருக்கும் பாக்கிஸ்தான் சர்க்காருக்குமிடையில் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. மதத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு ராஜ்யம் ஏற்படுத்தப்படுவதை இந்தியத் தலைவர்கள் பகிரங்கமாக எதிர்த்து வருகின்றனர். ஆனால் பாக்கிஸ்தான தலைவர்கள இதைப் பற்றி வாய் திறக்கவில்லை. ஆனால் சந்தோஷப்படத்தக்க வேறு ஒரு விஷயம் இருக்கிறது. ஐக்கிய மாகாண முஸலிம் தலைவர்கள் மகாதமா காந்தியைத் தங்களுடைய பரம விரோதியாக மதித்து வந்தனர். அவரைச் சூழ்ச்சிக்காரரென்றும் தந்திரசாலி என்றும் சொல்லிவந்தார்கள். அவர்களுக்கு இப்பொழுதுதான் புத்தி வருகிறது காந்திஜி அவர்களுடைய உண்மையான பெரிய நண்பர் என்பதை இப்பொழுது தான் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

"சத்யம் வென்றது, மனிதனின் உண்மையான குணத்தை உலகமெல்லாம் அங்கீகரித்துவிட்டது."

ஹிந்துஸ்தானியே இந்திய யூனியனில் பொது பாஷை

நாகரி-உருது இரு லிபிகளை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கற்கவேண்டும்

மகாத்மாஜியின் கருத்து

ஆமதாபாத், அக். 5—

ஹிந்துஸ்தானி என்ற தலையில் மகாத்மாஜி இன்றைப் ஹரிஜனில் எழுதுகிறார்:

ஸ்ரீ காகா கலேல்கார் எழுதுகிறார்:—

இந்திய யூனியனிடம் விஸ்வாசமுள்ளவரென்று இந்திய யூனியன் முஸ்லிம்கள் சொசிவார்களாயின் ஹிந்தியை தேல்யப் பாஷையாக ஏற்றுக்கொள்வார்களா? நாகரி எழுத்தை கற்றுக்கொள்வார்களா? இவ்விஷயம்பற்றி உங்களுடைய அபிப்பிராயத்தை தெளிவுபடுத்தாவிடில் ஹிந்துஸ்தானி பிரசார சபையின் வேலை மிகவும் சிரமமாய் விடும் இவ்விஷயம் பற்றி மௌலானா ஆஸாத் தமது அபிப்பிராயததை வியர்த்தமாக கூறமுடியாதா?

காகா கலேல்கார் சொல்வதில் புதிது எதுவும் கிடையாது. ஆனால் அதை இந்த சந்தர்ப்பத்தில் அவர் சொல்வதற்கு விசேஷ முக்யத்வம் உண்டு. இந்திய யூனியனிடம் தங்கள் விஸ்வாசததை தெரிவித்து இஷ்ட பூர்வமாக முஸ்லிம்கள் இந்தியாவை தாய்நாடாக மதித்தால் இரண்டு லிபிகளையும் கற்றுக்கொள்வது அவர்களுடைய கடமையாகும். ஒரே காமன்வெல்த் நாடுகளின் மெம்பர்களே அவர்கள். பரஸபரம் அவர்கள் எவ்விதம் விரோதிகளாக இருக்க முடியும்? ஆனால் இந்த இடத்தில அந்த சர்ச்சை அவசியமில்லை.

எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான ஒரு பாஷை யூனியனுக்கு இருக்க வேண்டும் இரு அரசாங்கங்களும் நேசமாக இருப்பின் "ஹிந்துஸதானி" இரு தேசங்களுக்கும் பொதுபாஷையாகயிருக்கவேண்டுமென்று கூடநான் சொல்வேன். ஹிந்தியும் உருதுவும் தனித்தனியாகவேண்டியதில்லை என்பது இதன் அர்த்தமல்ல. அவை இரண்டும் தனித்தனியாக வளர்ச்சியடைய வேண்டியதே. ஆனால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும், இந்தியாவிலுள்ள எல்லா மதத்தினரும் நேசமுள்ளவராயிருப்பின் ஹிந்தி உருது இவ்விரண்டிலிருந்தும் தொகுக்கப்படும் ஒரு பொது பாஷையை ஒப்புக்கொள்ள வேண்டும். இவர்கள் இரு எழுத்துக்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். இந்திய யூனியனிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களுக்கும் இது ஒரு சோதனையாகும்.

இந்திய யூனியனிலுள்ள முஸலிம்கள் நாகரி எழுத்தைகற்றுக் கொள்ள மறுத்தால ஹிந்துஸதானி தேசிய பாஷையாக முடியாதென்றுசொல்வதுதவறு. நாகரி எழுத்தை முஸலிம்கள் கற்றுக்கொண்டாலும்சரி, கற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, ஹிந்துக்களும் இதர மதத்தைச் சேர்ந்தவர்களும் இரு எழுத்துக்களையும் கற்றுக்கொள்ளவேண்டும். இப்பொழுது ஏற்பட்டுள்ள விஷம் நிறைந்த சூழ் நிலையில் இந்த சுலபமான யோசனையை புரிந்துகொள்ள முடியாமலிருக்கலாம். விரும்பினால் உருது எழுத்தையும் உருது வார்த்தையையும் ஹிந்துக்கள் பகிஷ்கரிக்கக் கூடும். ஆனால் அதனால் ஹிந்துக்களுக்குத்தான் நஷ்டம். ஆகவே ஹிந்துஸ்தானி பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளவர் தங்கள் நம்பிக்கையிலோ முயற்சியிலோ தளர்ச்சியடையக் கூடாது. ஹிந்துஸதானியையும் இரு லிபிகளையும் ஆலாதும் இந்திய யூனியனிலுள்ள இதர பிரபல முஸலிம்களும் அங்கீகரிக்க வேண்டுமென்பதைநான் ஒப்புக்கொள்கிறேன் அவர்கள் வழிகாட்டாவிடில் வேறு யார் காட்டுவார்கள்? நம்மை மிகவும் சிரமமானகாலம் எதிர் நோக்கியுள்ளது. கடவுள் நம்மை நல் வழியில் நடத்திச் செல்வார்.

காலி நகர சபைக்கு மாற்றப்பட்ட ஊழியர்

வேலை கிடையாது; சம்பளமும் இல்லை

கோர்ட்டாரிடம் முறையீடு

கொழும்பு, அக். 7

மொரட்டுவை நகரசபையின் கீழ் வேலை செய்த எம். ஸி. டபிள்யூ. ரொட்ரிகோ என்றவரிவகுல் இன்ஸ்பெக்டர் காலி முனிசிப்பாலிட்டிக்கு ஸ்தல ஸ்தாபனக் கமிஷனால் மாற்றி அனுப்பிவைக்கப்பட்டாராம். ஆனால் காலி நகர சபை அவரை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு வேலையோ, சம்பளமோ தரவில்லை என்று சொல்லப்பட்டது.

இதுபற்றி அவர் கமிஷனிடம் செய்த புகார்கள் எல்லாம் நிர்ப்பிரயோஜனமாயின தால் கடைசியாக அவர் காலி நகர சபை ஸ்தலஸ்தாபனக் கமிஷன் ஆகியவற்றின் மீது தமக்கு வேலையும் ஜூலை 1-ம் தேதி தொட்டு அரசாங்க நியமன விகிதப்படி சம்பளமும், அலவன்ஸ் முதலியனவும் தரும்படி கட்டளைபிறப்பிக்கும்வண்ணம் கோர்ட்டாரிடம் முறையிட்டுள்ளார்.

வழக்கு ஆரம்ப விசாரணையின் பின்னர் மேற்படி பிரதிவாதிகள் இருவர் மீதும் ஜஸ்டிஸ் கனகரத்ன அவர்களால் நோட்டீஸ் பிறப்பிக்கும்படி கட்டளையிடப்பட்டது.

துப்பாக்கி சகிதம் வீட்டில் நுழைந்தனர்

2 எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 6

அத்துல்கோட்டை அலிஸ் பெரேரா என்னும் மாது வசிக்கும் வீட்டில் துப்பாக்கி சகிதம் புகுந்து அங்கிருந்த பொருட்களை நாசப்படுத்தியதோடு காயமும் விளைத்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளான நியூட்டன் பெரேரா, ஜஸமின் கொடித்துவக்கு என்ற இருவருக்கும் ஒவ்வோர் வருஷம் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரிகளில் நியூட்டன் பெரேரா அலீஸின் தலைமயிரைப் பிடித்து அவள் மருமகன் எங்கே என்று கேட்டதாகவும், அவன் வீட்டில் இல்லை என்று கூற அவர்கள் பல இடங்களிலும் தேடி விட்டு அலீ டம் சம்பவத்தைப் பற்றி கிராமத் தலைமைக் காரனிடம் பிரஸ்தாபிக்கக் கூடாது என எச்சரித்துச் சென்றதாகவும் கூறப்பட்டது.

ஆனால் அலீஸ தலைமைக் காரனுக்கு அறிவிக்காது விடவில்லை.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் செல்டன் டி சில்வாவும் சர்க்கார் தரப்பில் ஏ. . எம். அமீரும் ஆஜரானார்கள்.

லொறிக்குப் பலியான பாலகன்

கடுகன்னாவை, அக். 5

கட்டுகாஸ்தொட்டயில் இருந்து கடுகன்னாவைக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு தேயிலை லொறி ஒரு ஐந்து வயதுப் பாலகனை நெரித்துவிட்டதன் காரணமாக அவன் அவ் ஸ்தலத்திலேயேஇறந்து போனான். மேற்படி குழந்தை வேறு மூன்று பேருடனும் ஒரு வேலைக்காரச் சிறுமியுடனும் வந்துகொண்டிருந்தது.

இச் சம்பவம் சம்பந்தமாக லொறிடிரைவர் பி. மாட்டின் கைது செய்யப்பட்டிருக்கிறான். இந்த விபத்து கிரிபத்கும்புரா என்னும் இடத்தில் நடைபெற்றது.

உலகை வட்டமிடும் விமானம்

சீனாவில் இறங்கியது

ஷாங்கை, அக். 5

உலகைச் சுற்றி ஆகாய மார்க்கமாகப் பறக்கக் கிளம்பியிருக்கும் ஜ்யார்ஜ்ரூமன், கிளிபோர்ட் ஈவான்ஸ என்பவர்கள் இன்று சீனாவில் உள்ள அமோயில் இறங்கினார்கள். இவர்கள் இங்கு இறங்குவதற்குக் காரணம் கடுமையாக வீசிய காற்றின் கொந்தளிப்பே ஆகும்.

ஜின்னா-சுஹ்ரவர்த்தி சந்திப்பு

மைனாரிட்டி திட்டம் பற்றி விவாதம்

கராச்சி, அக் 5—

ஜனாப் சுஹ்ரவர்த்தியும் சௌதரி கலிகுஜமானும் இன்று மாலை ஜனாப் ஜின்னாவை சந்தித்தனர்.

இரு டொமினியன்களிலும் மைனாரிட்டி பிரச்னையை தீர்ப்பது சம்பந்தமாக காந்திஜியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டத்தை ஜனாப் சுஹ்ரவர்த்தி ஜனாப் ஜின்னாவுடன் விவாதித்தார் என்று தெரிகிறது

ஜனாப் சுஹ்ரவர்த்தி குர்ரோவை நாளைய தினம் சந்தி. பார்.

ஸயாம்ஸதானிகர் நேருவை சந்தித்தார்

புதுடில்லி, அக். 5

இந்தியாவில் சயாமிய ஸதானிகரான டாக்டர் தானட்கோமன் இன்றுகாலை பிரதமர் பண்டித நேருவை அயல்நாட்டுவிவகார பொதுநல உறவுகள் இலாகாவில் பேட்டி கண்டார். தான் சர்க்காரிடமிருந்து கொண்டுவந்த ஓர் கடிதத்தை இவர் பண்டிதநேருவிடம் அளித்தார்.

டாக்டர் கோமன், வேறு இதர அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

திரிகோணமலைப் பிரதிநிதிக்கு வரவேற்பு நடத்த ஏற்பாடு

திரிகோணமலை, அக். 4

பாராளுமன்ற அங்கத்தவர் திருவாளர் சு. சிவபாலன் அவர்கள் மன்றத்தின் முதலாவது கூட்டத்திலிருந்து திரிகோணமலைக்குத் திரும்பி வருகிற அன்றைக்கு ஒரு வரவேற்பு விழா நடத்துவதைப்பற்றி பல பிரமுகர்கள் அடங்கிய ஓர் பொதுக் கூட்டம் திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களின் தலைமையின் கீழ் சங்கீத கலாசாலையில் இன்று நடைபெற்றது. வரவேற்பு நடாத்துவதற்கு ஓர் நிர்வாக சபை நிறுவப்பட்டுமுள்ளது. (ந-நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண உடையோடு காணாமற்போன மாப்பிள்ளை

உடையைக் கையாடி விட்டதாக வழக்கு

கடைசியில் கல்யாணம் செய்ய ஒத்துக்கொண்டார்

கொழும்பு, அக். 7

ஒரு கல்யாண மணமகன் தனது விவாக தினத்தன்று மணமகள் தரப்பினரால் கொடுக்கப்பட்ட கல்யாண உடைகளோடு அந்தர்த்தியானம் ஆகி விட்டார்.

இரண்டுநாட் கழித்து மேற்படி நபர் பல மைல்களுக்கப்பால் வைத்துப் போலிசாரால் கைது செய்யப்பட்டார். ஒரு டுவிட் கோட்டையும் பட்டு வேஷ்டியையும் தப்பாகக் கையாடி விட்டதாக குற்றம் சாட்டி அவர் உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்.

மேற்படி கல்யாண மாப்பிள்ளையின் பெயர் கொடிக்காவத்தை ஈபேட் ஜயசிங்க என்பதாகும். வெள்ளம் பிட்டிப் போலிசைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் முசாபர் வழக்கை ஒத்திப்போடும்படி கேட்டுக் கொண்டார். மேற்படி மாப்பிள்ளை பெண்ணின் தகப்பனாரோடு சமரசம் செய்து கொண்டு கல்யாணத்தை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்துவிட்டார் என்று கூறப்பட்டதன் பேரில் மாப்பிள்ளை 200 ரூபா பிணையில் விடப்பட்டார்.

மாப்பிள்ளை ஜயசிங்கா இன்று கோர்ட்டில் ஆஜராவார். அப்போது தமது விவாகப் பதிவு சட்டிபிகேட்டை அவர் சமர்ப்பிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஜப்பான் ஜவுளிகள்

இவ்வருடத்தில் இனி வராது

கொழும்பு, அக். 7

இவ்வருடத்தில் இலங்கைக்கு ஜப்பான் ஜவுளிகள் வருமென எதிர்பார்க்க முடியாது. டாலர் நாணய மாற்று எங்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தும் என்று பிடவைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜயரத்தின கூறுகின்றார்.

இந்த வருடத்தில் சென்ற ஆறு மாதங்களுக்கு நாம் 250 லட்சம் கெஜம் ஜப்பான் ஜவுளிகளைப் பெற்றுள்ளோம்.

புதுப் பிடவைக் கூப்பன்கள் விநியோகத்திற்கு வரவேண்டிய காலம் கடந்தும், அதிகாரிகள் சீக்கிரத்தில் புதுக் கூப்பன்களை விநியோகத்திற்கு விடத்தயாராயில்லை.

மிதியடிகள் மோசடி வழக்கு

வழக்காளியை சிவில் வழக்குத் தொடருமாறு நீதிபதி உத்தரவு

மாத்தறை, அக். 7

மாத்தறை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. எல். எஸ். சுறீமான இன்று கொழும்பு-ஆப்டீன்கம்பெனியின் சொந்தக்காரரில் ஒருவராகிய திரு. எஸ். ஏ. எம். மஸீஸீம் என்பவரால் அவரின் கம்பெனியின் மானேஜராகிய திரு. எம். எம். சாகித் என்பவர், வெலிகமவிலுள்ள ஆப்கோமிதியடி வேலைக் கம்பெனியின் ரூபா 6825-25 சதம் பெறுமதியான பொருட்களை மோசடி செய்துள்ளதாகக் குற்றஞ் சாட்டித் தாக்கல் செய்துள்ள வழக்கை விசாரணை செய்தார்.

வழக்காளி, மிதியடி தயாரிக்கும் கம்பெனிக்கு சாகித் என்பவரே மானேஜராக விருந்தாரென்றும், ஒவ்வொரு சோடி மிதியடிக்கும் அவருக்கு ஐந்து சதம் கமிஷன் கொடுத்ததாகவும் கூறினார்.

எதிரி தாமும் அக்கம்பெனியில ஒரு பங்குதாரரென்றும், ஒருநாள் வழக்காளி கணக்குப் பார்வையிடப் போவதாகக் கூறி தம் கணக்குப் புஸ்தகத்தைத் தூக்கிச் சென்றதாகவும் கூறினார்.

எதிரியை ரூபா 2000 பிணைப் பணம் கட்டும்படியும், வழக்காளியை சிவில்வழக்குத் தொடரும்படியும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

மதில் மேல் நின்ற இரு தமிழ் பூனைகள்

வாக்காளரை வஞ்சித்து தமிழர் மானத்தை போக்கலாமா?

சாய்வுகால் பக்கம் தாவிக்குதித்து தந்திரமாக மந்திரி பதவிகளைக் கட்டித்தழுவிய விந்தை

நாட்டின் நலனை மறந்து பதவிகளுக்கு கொல்லை வழியாகப் போட்டியிடும் புல்லுருவிகள்

"ஹெலதிவ" என்னும் சிங்களப் பத்திரிகை 4-10-47ல் பின்வருமாறு எழுதுகிறது:

பிரதம மந்திரி திரு சேனநாயக்காவுக்கு மந்திரிசபையிருவும் படி கவர்னர் உத்தரவிட்டார். உடனே அவர் இருமந்திரிகளைத் தெரிவு செய்துவிட்டார். அவர்கள் திரு. எல். ஏ. ராஜபக்ஸ, ஸ்ர். ஒலிவர் குணதிலகா ஆகிய இருவரே. இவர்களிருவரும் சாதாரண வாக்காளர்களே; சென்ட் சபைக்குக்கூட தெரியப்படடவர்கள் அல்ல. சென்ட்டுக்கு தெரிவு செய்யப்படாதிருக்கும் போது, அதற்கு முன் மந்திரிகளாக தெரிவு செய்யப்படுவதெப்படி? அதுவும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுமல்ல. எனினும் இவர்களிருவரும் மந்திரிகளாகிவிட்டார்கள். இது சம்பவம் பொதுமக்களுக்கு புரிந்து கொள்ள முடியாத காரணமாய் இருக்கிறது. உயர்பதவி நியமனங்களும் உத்தியோகத் தெரிவுகளும் இப்படித்தான் பொது மக்களுக்கு புரிந்து கொள்ள முடியாதபடி எல்லாம் அவர்கள் விருப்பப்படி மர்மமாய் நடக்கின்றன.

பின்வாசல் முற்றுகை

சென்ட் சபைக்கு வேண்டிய 30 பேரில் கவர்னரும் பிரதம மந்திரியும் கலந்து கொண்டு 15 பேர்களை தெரிவு செய்வார்கள். மற்ற 15 ஆசனங்களுக்கும் இப்போது தூங்கி விழுந்து கொண்டிருக்கும் பெரிய குடும்பத்து பெரிய மனிதர்கள் பின்வாசலை முற்றுகையிட்டிருக்கிறார்கள், தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் கூட சென்ட் சபைக்குள் நுழைந்து கொள்ளுவதற்கு முனைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தேவையான மட்டும் பணச்செல்வாக்கு இருக்கிறபடியால் லஞ்சம் கொடுத்தாவது, சென்ட் சபைக்குள் நுழைந்து விட அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்களென்று தெரிகிறது.

'ஜாவாரம்" செய்யும் எண்ணம்

சுயேச்சை அங்கத்தவர்களிற் சிலர் ஏதாவது "ஜாவாரம்" செய்து கொள்ளலாமென்று ஐ. தே. கட்சியில் சேர்ந்திருப்பதானது, அவர்கள் போட்டியிட்டு வெற்றியடைந்த தொகுதி வாக்காளர்களை ஏமாற்றுவதாகிறது. இவர்கள் அங்கே தேர்தல் பிரசாரம்செய்தபோது தாம் ஐ. தே. கட்சியை எதிர்ப்பதென்றே வாக்காளர்களுக்கு வாக்குறுதி யளித்திருக்கிறார்கள் அதனால்தான் வெற்றியடைந்தார்கள்.

ஏமாற்றுப் பேர்வழிகள்

ஆனால், இவர்கள் இப்பொழுது என்ன செய்திருக்கிறார்கள்? பொது வாக்காளர்களை விற்றிருக்கிறார்கள். இந்த ஏமாற்றுப் பேர்வழிகளை மறுபடி அந்தந்த தொகுதிகளுக்வரவிடாது பகிஷ்கரிக்க பொது மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஏமாற்றுப் பேர்வழிகளைப்பற்றி பொது மக்கள் எதிர்காலத்தில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

மன்னார், வவனியா அங்கத்தவர்கள்

அவர்கள் யார்? முக்கியமானவர்கள் மன்னார், வவனியா அங்கத்தவர்களே. இவர்கள் சுயேச்சை மதிலிலிருந்து ஐ. தே. கட்சிக்குப் பதுங்கிப் பாய்ந்தது விநோதத்திற்காக வல்ல என்பது இப்போது மன்னார் – வவனியா தொகுதி வாக்காளர்களுக்கும் அகில இலங்கைக்குமே தெரிந்துவிட்டது. மன்னார் வவனியா தொகுதிக்கு இந்த ஏமாற்றுப் பேர்வழிகளை வரவிடாது தடை செய்யவும் இவர்களின் நடத்தையைக் கண்டிக்கவும் அத்தொகுதி மக்கள் நடவடிக்கையெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

திரு ஸ்ரீ நிசங்கா கூறும் காரணம்

நான் சேனநாயக்கா கட்சியோடு சேராததற்கு காரணம் அவரோடனோ அல்லது திரு. கொத்தலாவலையுடனோ உள்ளநேரடியான மன ஊதாபதினலல்ல அவர்களுடன் எனக்கு எவ்வித மனஸ்தாபமும் கிடையாது ஆனால் அவர்களும் அவர்களின் கோஷ்டியினரும தேசத்தை பிளவுபடுத்தி நிர்மூலமாக்கும் பழைய குடும்பக் கொள்கைளை விட்டுவிடவேண்டும். பெருந்தன்மையோடும் சமரச மனப்பான்மையோடும் அரசியல் துறையில் நடந்து கொண்டு தேசமக்களின் ஏகோபித்த ஒத்துழப்பைப் பெறவேண்டும் எனவே, ஐ. தே. கட்சியை கலைத்துவிட வேண்டும். சுதந்திர மக்களையுடைய எதிர்கால சந்ததியைப் பேண குறிக்கோளாகக் கொண்டு முன்வருவார்களாயின், அவர்களுடையபணி விடை செய்யக் கூட முன்நிற்பேன்.

அரசியல் சதியை விட்டுவிட வேண்டும்

தேசத்தின் பலதரப்பட்ட மக்களின் சமாதானத்தையும், அவர்களுக்கு உகந்த சீரான உறுதியான அரசாங்கத்தையும் நிலைநாட்ட சேனநாயக்கா கட்சி விரும்பினால், சூழ்ச்சியான நடவடிக்கைகளையும் அரசியல் சதிகளையும் தூர ஒதுக்கி விட்டு சீரான முறையில் நேரடியாக நடவடிக்கை யெடுத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதாவது பொது ஜனப் பிரதிநிதிகளின் திறந்த பொது லட்சியம் வேண்டும். முற்போக்குள்ள பொது மக்களின் விருப்பத்தை, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் கௌரவிக்க வேண்டும். ஆனபடியால் ஐ. தே. கட்சியை எதிர்த்துப் போராடுவது எமது லட்சியமாக இருக்க வேண்டும்.

பார்லிமெண்ட் ரீதியாம்

கவர்னர் பிரதம மந்திரியை நியமித்தார். பிரதமமந்திரிமந்திரிகளை தமக்கு வேண்டிய மாதிரி தெரிவுசெயது, நியமனமும் செய்துவிட்டார். இதிலிருந்து தெரிவதென்ன? கவர்னர் தான் அதிகாரத்தை உபயோகித்திருக்கிறார் என்பதாகிறது. இது பார்லிமெண்ட் ரீதியாம! எனினும் அறிவுள்ளவர்கள் இந்த ரீதியைக் கண்டு சிரிக்க மாட்டார்கள்!

ஆனால், பொதுஜனப் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்பட்ட மந்திரிகள் இல்லையென்பதுமட்டும் பொதுமக்களுக்குத் தெரியும். எனினும் இந்த பார்லிமெண்டுக்கு ஆயுள் குறைவு என்று விஷயம் தெரிந்த அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளுகிறார்கள்.

பார்லிமெண்டுத் தலைவர் போட்டி

பார்லிமெண்டுத் தலைவர் பதவிக்கு பலத்த போட்டியேற்படுமென்று தெரிகிறது. சேனநாயக்கா கட்சியின் சார்பாக திரு. பிரான்ஸிஸ மொலமுரேயும், எதிர்க்கட்சிகள் சார்பாக திரு. ஸ்ரீநிசங்காவும் போட்டியிடுவாகள். இப்பொழுது அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இருக்கும் அரசியல் விவகாரங்களின் நிலைமையை உற்றுநோக்கும்போது பாரபட்சமற்ற தலைவர் பதவியின் முக்கியத்துவம் எவ்வளவென்று தெரிகிறது. திரு பிரான்சிஸ் மொலமூரே தலைவர் பதவியைக் கைப்பற்றிவிட்டால் எதிர்க் கட்சியினரின் "பேச்சுச் சுதந்திரம்" குழிதோண்டிப் புதைக்கப்படுமென்று யார்தான் நினைக்கமாட்டார்கள்.

திரு. ஸ்ரீநிசங்காவின் தகுதி

திரு ஸ்ரீநிசங்கா தலைவர் பதவிக்கு வந்துவிட்டால், இடது சாரிகளுட்பட எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு நியாயமான "பேச்சுச் சுதந்திரம்" இருக்குமென்பதில் சந்தேகமில்லை. பாரபட்சமற்ற முறையில், நிர்த்தாட்சண்யமாகவும் ஞானதீட்சண்யமாகவும் நடந்து கொள்வதில் தான் தலைவர் பதவியின் கௌரவம் காப்பாற்றப்படும்.

"சிங்களம்" தெரியாவிட்டால்?

பார்லிமெண்டில் சுய பாஷைகளில் பேசுவதற்கு வசதியிருப்பதால், அதுவும் சிங்களத்தில் உயர்ந்த பாண்டித்தியம் அவசியம் வேண்டியிருக்கிறது. திரு. மொலமுரே என்னவானாலும், திரு ஸ்ரீநிசங்காவுக்கு ஆங்கிலத்தைப்போன்று, சிங்களத்திலும் போதிய பாண்டித்தியம் இருக்கிறதென்பதில் எவருக்கும் அபிப்பிராய பேதம் இருக்காது.

சீரான ஒழுக்கம் வேண்டும்

பார்லிமெண்டின் தலைவருக்கு சீரான ஒழுக்கம் இருக்க வேண்டுமென்பதை எல்லோரும் வரவேற்பார்கள். ஒரு தேசத்தில் பார்லிமெண்டின் தலைவரின் கௌரவம் தேசத்தின் கௌரவமாகும். அந்த ஒழுக்கம் திரு. மொலமூரேக்கு இருக்கிறதென்று, யூ. என். பிக்காருக்கு மாத்திரம் தெரியும் போலும்!

பத்தாவது தேர்தல் ஆட்சேபனை

கடுகன்னுவை அங்கத்தினர் மீது புகார்

கொழும்பு, அக். 7

கடுகன்னுவைத் தொகுதிக்கு பார்லிமெண்ட் அபேட்சகராக விளங்கும் திரு. எச். ஆர். யூ. பிரேமசந்திராவின் தேர்தலை ஆட்சேபித்து மொரட்டுகொட டி வில்லியம் என்ற வாக்காளர் ஒரு தேர்தல் ஆட்சேபனை மனுவை சுப்ரீம் கோர்ட்டுக்குச் சமர்ப்பித்திருக்கிறார். இதுவே கடந்த மார்லிமெண்ட் தேர்தலின் எதிரொலியாகத் தாக்கல் செய்யப்பட்ட 10-வது தேர்தல் மனுவாகும்.

மனுதார் தேர்தலுக்கு முன்னும் பின்னும் திரு. பிரேமசந்திரா நேரடியாகவும், தனது உதவியாளர் மூலமாகவும் வாக்காளருக்கு உணவு வகைகள் குடிவகைகள் உதவித் தப்பாக வோட்டுச் சேகரித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டி யுள்ளார். அத்துடன் திரு. பிரேமசந்திராவும் அவரது சகபாடிகளும் கார்களை வாடகைக் கெடுத்தும் இரவல் வாங்கியும் தமது தேர்தலன்று உபயோகித்திருப்பதாகவும் அவர் கூறுகிறார். இவை தவிர அவரது ஆதரவாளர்கள் பொய்யான செய்திகளை வேறு அபேட்சகர் ஒருவரைப் பற்றி அச்சிட்டு வினியோகித்தனர் என்றும் இதை திரு. பிரேமசந்திரா அறிவார் என்றும் குற்றம் சாட்டுகிறார். மேற்படி துண்டுப் பிரசுரங்களில் எழுதி அச்சிட்டவர் பெயரோ அலலது அச்சுக் கூடப் பெயரோகாணப் படாததால் அது மற்றோர் குற்றம் எனவும் அவர் வாதித்துளளார் வாக்காளர் தமது வோட்டுகளை உபயோகிப்பதற்கு குந்தகமாக அவரோ அவரது ஆட்களோ மோசடிகள் செய்திருப்பதாகவும் அவரால் கூறப்படுகிறது.

இத்தியாதி காரணங்களால் அவரது தேர்தல் செல்லுபடியாகாது எனப் பிரகடனம் செய்யவேண்டும் என்று மேற்படி வாக்காளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. சோமவீர குணசேகரா என்பவர் மனுதாரின் ஏஜெண்டாகும்.

திருவிதாங்கூர் தமிழர்கள் கூட்டம்

தனிப்பட்ட தமிழ் மாகாணத்தையமைக்க கோரிக்கை

காந்திஜியின் பிறந்த தினத்திற்கு வாழ்த்துக்கள்

திருவனந்தபுரம், அக். 5

பொறுப்புள்ள முழுஅதிகாரங்களைக் கொண்ட சர்க்கா டன் ஓர் தனிப்பட்ட தமிழ் மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்று இங்கு இன்று நடைபெற்ற திருவிதாங்கூர் தமிழர்கள் கூட்டத்தில், ஓர் தீர்மானம் நிறைவேறியது தமிழ்நாடு காங்கிரஸ தான் திருவிதாங்கூரிலுள்ள எல்லா தமிழர்களையும் அடங்கிய அரசியல் ஸ்தாபனமாகும் என்றும் இவர்கள்சார்பில் பேச இதற்குத்தான் உரிமையுண்டு என்றும் இக்கூட்டத்தில் கூறப்பட்டது.

திருவிதாங்கூருக்கு டொறுப்புள்ள சர்க்கார் வழங்கப்பட்டிருப்பதைவரவேற்று ஓர் தீர்மானமும் மகாத்மாகாந்தியின் 79-வது பிறந்த தினத்திற்கு மரியாதை செலுத்தி மற்றொரு தீர்மானமும் ஆக மேலும் இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

காந்திஜியைகாண பிரபல அமெரிக்கர் விஜயம்

பம்பாய், அக். 5

மகாத்மாஜியை சந்திக்க ரெவரெண்டு ஜான ஹேமேஸ் என்ற பிரபல அமெரிக்கர் இன்று பம்பாய்க்கு வந்திருக்கிறார். அவர் காந்திஜியின் பரமபக்தர். பம்பாயில் ஒரு வாரம் தங்குவார் சுதந்திர இந்தியா எப்படி இருக்கிறதென்பதை தெரிந்து கொள்வார்.

நாங்கிங்கில் காந்தி ஜெயந்தி

புதுடில்லி அக். 5

நாங்கிங் ஷாங்கை இவ்விடங்களில் அக். 2-ம் தேதியன்று காந்திஜெயந்தி கொண்டாடப்பட்டது நாங்கிங்கில் ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் அளித்த விருந்துக்கு மந்திரிகளும் உயர்தர அதிகாரிகளும் வந்திருந்தனர். ஸிங இந்தியர் சங்கத்தலைவரும் கல்வி மந்திரியுமான டாக்டர் சூசியா ஹுவா டில்லியில் சீனப் பிரதிநிதியான டாக்டர் லோ சியாலுன் இருவரும் காந்திஜியின் சேவைகளைப் புகழ்ந்து பேசினர்.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கண்பெக்ஷன் கம்பெனி
207 & 307 செ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை
வாங்கி உபயோகியுங்கள்.

கல்வியே கருந்தனம்

வெளி வந்துவிட்டது! குறைந்த கட்டணம்!
வெளி வந்துவிட்டது!! நிறைந்த பரிசு!!

கலை அறிவுப் போட்டி நிர்-1

ரொக்கப் பரிசு ரூபா. 1200.

1-ம் பரிசு ரூபா. 500-00
2-ம் „ „ 300-00
3-ம் „ „ 150-00

1-ம் போனஸ் பரிசு ரூபா. 75-00
2-ம் „ „ „ 50-00
3-ம் „ „ „ 25-00

அனுதாபப் பரிசு ரூபா: 100

முடிவு திகதி 10-11-47.

விடையும் பரிசுபெற்றோர் விபரமும் 15-11-47 சுதந்திரனில் வெளிவரும்
பிரவேசக்கட்டணம் முதல் கூப்பனுக்கு சதம் 50. (அணு 8.)
5 கூப்பன்களுக்கு ரூபா 2-50. அதன்மேல் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 25. (அணு 4.)

1	வி	ஷ்	ணு
2	அ		பு
3		ங்	கை
4		ல	ம்
5	க		வு
6		ந்	தி
7		ங்	கு
8	பூ		ம்
9	ப	ய	
10	வ்	ல	

குறிப்புகள்
1. காக்கும் தெய்வம் இதுவே
2. ஈரம் காட்டும் இது
3. பெண்தான்
4. வேளாண்மையின் பயன் இதிலும் தங்கியிருக்கிறது
5. பிறர் அறிய இது நிகழாது
6. ஒரு பிராணி
7. இதைச் சொல்லி இடம் காட்டலாம்
8. ஒரு நட்சத்திரம்
9. பிரயோசனம்
10. வெற்றி

இதன் விடை யாழ்ப்பாணம் எக்ஸ்சேஞ் வங்கியில் டிப்பாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.
விடைகளைத் தனிக் காகிதத்திலும் எழுதியனுப்பலாம்.
நிபந்தனைகளுக்கும் இலவசக் கூப்பன்களுக்கும் உடனே எழுதுக.
குறிப்பு:- எங்கள் போட்டிக் கூப்பன்களை விநியோகிப்பதற்கு இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷனுண்டு.

கலை அறிவுப்போட்டி நிலையம்
தம்பளை ரோட், பருத்தித்துறை (சிலோன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு ஆசியா செய்திகள்:

புதிய அரசியல் திட்டத்திற்கு மலேயாவில் எதிர்ப்பு

பண்டித நேருவுக்கு வியட்நாம் தலைவர் செய்தி

மலேயா இந்தியர் தலைவர் இந்தோனேஷியாவில் இந்திய ஸ்தானீகராக நியமனம்

ஜனுவரி 2-ம் தேதி பர்மாவுக்கு சுதந்திரம்

சிங்கப்பூர், அக். 6

மலேயாவின் புதிய ஐக்கிய அரசியல் திட்டம் பொதுமக்கள் ஆட்சேபனையின்மீது திருத்தியமைக்கப்பட்டது. இப்புதிய அரசியல்பற்றி நேற்று மலேயா கவர்னர் ஜெனரல் புகழ்ந்து ரேடியோவில் பிரசங்கம் செய்தார். இப்படி திருத்தப்பட்ட ஐக்கிய அரசியல் திட்டம் ஜனநாயக முறைக்கு முரணாகவும், நீதிக்குப் பொருந்தாததாகவும், நியாயமற்ற தென்றும் கண்டித்து மலேயா முழுதும் கடைகளை மூடி ஹர்த்தால் செய்யும்படி இன்று கோலாலம்பூரிலுள்ள சீன வர்த்தக ஐக்கிய சங்கத்தார் முடிவு செய்தனர். மலேயாவிலுள்ள எல்லா வகுப்பினரும் இதே அபிப்பிராயமுடையவர்களாக இருப்பதாகவும், பொது ஜனங்களுக்கு கஷ்டம் நேரிடாதிருக்கும்படி மற்ற முக்கிய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை இந்த ஹர்த்தாலில்கலந்து கொள்ளும்படி அழைக்கவில்லை என்றும்சங்கத்தார் தெரிவித்தனர். மலேயாவுக்கு ஐக்கிய அரசியல் வழங்கவிருக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக் கூட்டம் ஆரம்பமாகும் அக்டோபர் 20-ம் தேதி மலேயாவெங்கும் வர்த்தகர்கள் ஹர்த்தால் செய்வதென தீர்மானித்திருக்கின்றனர்.

புதிய ஐக்கிய அரசியல் திட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையென்றும் வேறு திட்டம் வகுக்க ஒரு அரசியல் விசாரணைக் கமிஷன் நியமிக்கும்படியும் சென்ற மாதம் இச்சங்கத்தார் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்குத் தந்தி அனுப்பியிருந்தார்கள்.

சோவியத் வர்த்தகபிரதிநிதி

மலேயாவில் தங்கியிருக்க அனுமதிமறுக்கப்பட்ட சோவியத் வர்த்தகப் பிரதிநிதி ப்ளாக்கின் மேலும் ஒருவாரம் தங்கியிருக்க அனுமதியளிக்க வேண்டுமென்று சீன வர்த்தக சங்கத்தார் கோரினர். ஆர்டர் கொடுத்த ரப்பர் முழுவதையும் வாங்குவதற்காக சர்க்கார் அவருக்கு மேலும் ஒரு வாரம் சிங்கப்பூரில் தங்கியிருக்க அனுமதியளித்தார்கள்.

சோவியத் ரஷியாவில் பிரிட்டிஷ் வர்த்தக பிரதிநிதிகள் தங்கியிருக்க சோவியத் சர்க்கார் அனுமதியளிக்காதபடியால் மலேயாவில் சோவியத் வர்த்தக பிரதிநிதி தங்கியிருக்க அனுமதியளிக்கமுடியாதென சென்ற ஜூலை மாதமே இப்பிரச்னை கிளப்பப்பட்டது.

வியட்நாம் வேண்டுகோள்

சைகோன், அக். 6

வியட்நாமிலுள்ள (இந்தோ-சைனா) அறிவு உழைப்பாளிகள் சங்கத்தார் இன்று பிரஞ்சு குடியரசுத் தலைவர் ஆரியலின் மனைவியாருக்கும், உலக சமாதான காங்கிரஸுக்கும் கீழ்க்கண்ட வேண்டுகோள் விடுத்தனர்:-

பிரஞ்சுக்காரருக்கும் வியட்நாம் மக்களுக்கும் நடைபெறும் யுத்தத்தில் நீங்கள் குறுக்கிட்டு சமாதானத்தை ஏற்படுத்த முயலுங்கள். பிரஞ்சு ஏகாதிபத்தியப் பேராசைக்காரர்களால் வியட்நாம் மீது பிரஞ்சுக்காரர்கள் போர் நடத்துகிறார்கள். இந்த நடவடிக்கை பிரஞ்சுக் குடியரசு அரசியல் திட்டத்திற்கும் ஐக்கிய தேச ஸதாபனக் கொள்கைக்கும் முற்றிலும் முரணானது.

நேற்றிரவு ஹானோய் மாகாணத்தில் கொஞ்ச தூரத்திலிருந்து கப்பல் பீரங்கி சத்தமும் வெடிகுண்டு சத்தமும் கேட்டது. இன்று ஹானோய் நகரும் சைகோன் துறைமுகப்பட்டினத்திற்குமிடையே நடைபெற்று வந்த எல்லா விமானப் போக்குவரத்துகளும் நின்று விட்டன.

பிரஞ்சுத் துருப்புகளுக்கும் வியட்நாம் துருப்புகளுக்குமிடையே மீண்டும் கடுமையான போர் ஆரம்பித்திருக்கிறதென்று கருதப்படுகிறது.

கொச்சின் சைனா

கொச்சின் சைனாவுக்கு ஜெனரல் ஸுவான் அரசாங்கத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். கொச்சின் சைனா சட்டசபையில் மூன்றில் ஒரு பங்கு பிரெஞ்சு அங்கத்தினர் 14 பேர்களிருக்கிறார்கள்.

கொச்சின் சைனா பிரெஞ்சு இந்தோ சைனாவில் சுயாட்சியுள்ள ஒரு மாகாணமாக இருக்கவேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். சிலர் அது வியட்நாம் சுதந்திரக் குடியரசுடன் இணைக்கப்படவேண்டுமென்கிறார்கள். இது சம்பந்தமாக வாக்கெடுப்பு நடத்தத் தயாராக இருப்பதாகத் தலைவர் தெரிவித்தார்.

ஹாலந்துப் பிரதிநிதி அளப்பு

நியூயார்க், அக். 6

இன்று ஐக்கிய தேச தர்மகர்த்தாக் கமிட்டிக் கூட்டத்தில் ஹாலந்துப் பிரதிநிதி கெர்ன் காம்ப் பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தோனேஷியா சுதந்திரமடைய ஹாலந்து முன்னேற்றமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். பசிபிக் சமுத்திரத்தில் ஹாலந்து தனக்கு முன்னிருந்ததுபோல குடியேற்ற நாடுகளை அடிமையாக வைத்திருக்க விரும்பவில்லை.

பாதுகாப்பு கவுன்ஸிலின் மூவர் கமிஷன் முன்பு டச்சு-இந்தோனேஷிய தகராறு சம்பந்தமாக இந்தோனேஷியக் குடியரசு சர்க்கார் சார்பாக சாட்சியம் கொடுக்க இந்தோனேஷிய பார்லிமெண்டில் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவராக உள்ள டாக்டர் ஷம்சுதின் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தோனேஷியப் பிரதமர் தூதுக்கோஷ்டியை நடத்திச் செல்வார். இதில் ஒரு சீன அங்கத்தினருமிருப்பார்.

அமெரிக்க விமானத்தில் வந்த மூன்று டச்சு சோல்ஜர்களை இந்தோனேஷிய சர்க்கார் யுத்தக் கைதிகளாக சிறைப்படுத்தியிருக்கின்றனர்.

பர்மாவின் சுதந்திர தினம்

ரங்கூன், அக். 6

பர்மாவுக்கு 1948 ஜனுவரி மாதம் 2-ம் தேதி சுதந்திரம் வழங்கப்படுமென்று இங்குள்ள பர்மியப் பத்திரிகைகள் தேதி குறிப்பிட்டிருக்கின்றன.

பர்மாவில் லஞ்சங்களையும் குற்றங்களையும் அறவேயொழிக்க சர்க்கார் சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தீர்மானித்திருப்பதாக பர்மா பிரதம மந்திரி தக்கின் நு தெரிவித்தார். இது சம்பந்தமாக அவர் இப்பொழுது பாஸிஸ்ட் எதிர்ப்பு சுதந்திர லீக்கைச் சேர்ந்த பல தலைவர்களுடனும் பர்மா கமியூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி தக்கின் டுக்குடனும் மத்திய பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்.

பர்மாவில் 30 வருட காலம் தங்கியிருந்து லண்டன் திரும்பிய ஒரு ஆங்கிலேயர் பர்மாவுக்கு சுதந்திரமளித்தால் அதை பாதுகாத்துக் கொள்ள பர்மாவால் முடியாதென்று லண்டனுக்கு வந்தபிறகு தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

பண்டித நேருவுக்கு வியட்நாம் தலைவர் செய்தி

சைகோன், அக். 6

இன்று வியட்நாம் தலைவர் டாக்டர் ஹோசிமின் ரேடியோ மூலம் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு கீழ்க்கண்ட செய்தி அனுப்பினார்:-இந்தியாவில் வெள்ளத்தால் கஷடப்படும் ஜனங்களுக்கு நான் வியட்நாம் மக்கள் சார்பாக அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளக் கஷ்ட நிவாரணத்திற்காக வியட்நாம் சர்க்கார் 10 லட்சம் பிராங்க் (2500 பவுண்) அனுப்பி வைக்கத் தீர்மானித்திருக்கிறது.

டச்சு விமானப் போக்குவரத்து

ஹேக், அக். 6

டச்சு விமானக் கம்பெனியின் விமானங்கள் ஆம்ஸ்டர்டாமிலிருந்து பட்டேவியா செல்லும் மார்க்கத்தில் கராச்சியிலும் கல்கத்தாவிலும் தங்கிச் செல்ல பாகிஸ்தான் சர்க்காரும் இந்தியா சர்க்காரும் மீண்டும் அனுமதி கொடுத்தனர். இந்தோனேஷியாவை டச்சுக்காரர் ஆக்கிரமித்ததைக் கண்டித்து ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அதன் பயனாக டச்சு விமானங்கள் இலங்கை மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தன.

இந்தோனேஷியாவுக்கு இந்தியா ஸ்தானாதிபதி

புதுடில்லி, அக். 6

இந்தோனேஷியாவில் இந்திய சர்க்கார் ஸ்தானீகத்தை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றனர். மலேயாவில் வெகுகாலமாக இந்திய சமூகத் தலைவர்களுள் ஒருவராக இருந்த திரு. என். ராகவன் (பாரிஸ்டர்) பட்டேவியாவில் முதலாவது இந்திய ஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பதவியை ஏற்க அவர் உடனே புறப்பட்டுச் செல்வார்.

(ராய்ட்டர், அ-பிரஸ்)

ஸ்காட் பாதிரியார் அமெரிக்கா போகிறார்

அனுமதிச் சீட்டு கிடைத்துவிட்டது

ஜெனரல் ஸமட்ஸ அக்கிரமங்களை தெருச் சிரிக்கவைப்பார்

லண்டன், அக். 6

தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கும் அப்பிரிக்கர்களுக்கும் அங்கு ஜெனரல் ஸமட்ஸ தலைமையிலுள்ள வெள்ளைக்காரர் அரசாங்கம் செய்யும் அக்கிரமங்களை ஐக்கிய தேச ஸதாபனத்தில் முறையிட்டு அம்பலப்படுத்தும் பொருட்டு புறப்பட்ட ஆங்கிலப் பாதிரியாரான சங்கை மைக்கேல் ஸ்காட்டிற்கு அமெரிக்க சர்க்கார் வருவதற்கு அனுமதிச் சீட்டு கொடுக்காமல் தாமதப்படுத்தி வந்தனர். நியாயத்திற்குப் போராடும் தர்மசீலரான பாதிரியார் ஸகாட் காத்திருந்து பார்த்துப் பயன் ஏற்படாது இங்கிலாந்துக்குப் புறப்பட்டு வந்தார். இங்கு அவர் செய்த முயற்சியின் பயனாக இப்பொழுது அனுமதிச் சீட்டு கிடைத்துவிட்டதென்று தெரிகிறது. பிரிட்டிஷ் பிரஜா உரிமை சங்கத்தார் அமெரிக்க மாஜி உப தலைவர் வாலஸுக்கும் ஸ்ரீமதி ரூஸவெல்டுக்கும் தந்தியனுப்பி அனுமதிச்சீட்டு வரவழைத்தார்கள்.

பாதிரியார் ஸகாட் கிழக்கு லண்டனிலுள்ள ஏழைகளுக்காகப் பாடுபட்டவர். அவருக்கு இப்பொழுது வயது 38. 13 வருடங்களுக்கு முன் அவர் தென்னாப்பிரிக்கா சென்று அங்குள்ள சுதேசிகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர். வெள்ளை அரசாங்கத்தின் அனுமதிச் சீட்டின்றி அவர் ஆப்பிரிக்கர்களுக்கு மத்தியில் குடியிருந்ததற்காக கோர்ட்டார் அவருக்கு 5 பவுண் அபராதம் விதித்தனர் அதை அவர் கொடுக்காது சிறைவாசம் அனுபவித்தார். மேற்கு ஆப்பிரிக்காவைத் தென்னாப்பிரிக்காவுடன் இணைக்கலாகாதென்று முறையிட மேற்கு ஆப்பிரிக்க சுதேசிகளின் தலைவர்களின் மனுவை ஐக்கிய தேச ஸதாபனத்தில சமர்ப்பிக்க அவர் எடுத்துச் செல்கிறார்.

மேற்கு ஆப்பிரிக்க பிரச்னை சம்பந்தமாக இந்தியா பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானம் நாளை ஐக்கியதேச தர்மகர்த்தா கமிட்டியில் விவாதிக்கப்படும்.

(ராய்ட்டர்)

கலால் குற்றத்திற்கு ரூபா 350 அபராதம்

மட்டக்களப்பு, அக். 5

உப்போடையைச் சேர்ந்த ஏ. அந்தோனிமுத்து என்னும் வெள்ளை பாவா சட்டவிரோதமாகக் கள்ளு வைத்திருந்து விற்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ரூபா 350 அபராதம் விதிக்கப்பட்டது.

(ந-நி)

டச்சு விமானப் போக்குவரத்து

ஹேக், அக். 6

டச்சு விமானக் கம்பெனியின் விமானங்கள் ஆம்ஸ்டர்டாமிலிருந்து பட்டேவியா செல்லும் மார்க்கத்தில் கராச்சியிலும் கல்கத்தாவிலும் தங்கிச் செல்ல பாகிஸ்தான் சர்க்காரும் இந்தியா சர்க்காரும் மீண்டும் அனுமதி கொடுத்தனர். இந்தோனேஷியாவை டச்சுக்காரர் ஆக்கிரமித்ததைக் கண்டித்து ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அதன் பயனாக டச்சு விமானங்கள் இலங்கை மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தன.

இந்தோனேஷியாவுக்கு இந்தியா ஸ்தானாதிபதி

புதுடில்லி, அக். 6

இந்தோனேஷியாவில் இந்திய சர்க்கார் ஸ்தானீகத்தை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றனர். மலேயாவில் வெகுகாலமாக இந்திய சமூகத் தலைவர்களுள் ஒருவராக இருந்த திரு. என். ராகவன் (பாரிஸ்டர்) பட்டேவியாவில் முதலாவது இந்திய ஸ்தானாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பதவியை ஏற்க அவர் உடனே புறப்பட்டுச் செல்வார்.

(ராய்ட்டர், அ-பிரஸ்)

ஏகாதசி விரதமிருந்தால் இதர நாடுகளின் உதவி தேவையிராது

(1-ம் பக்கத் தொடர்)

மடையும். யுத்தம் நேரிடின் இந்திய ஐக்கியத்திற்குப் பங்கம் ஏற்படும். இப்பொழுது ஜனங்கள் வேறெவ்விதக் கவலையும் கொள்ளாமல் நாட்டைப் பலப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். சோஷியலிஸ்டுகளோ அல்லது கமியூனிஸ்டுகளோ இப்பொழுது நாட்டை வேறு பாதைகளில் கவனம் செலுத்தும்படி இழுத்துச் செல்ல முயல்வது தீமையையே விளைவிக்கும்.

75 மைல் நீள அகதிகள் அணிவரிசை யாத்திரை

புதுடில்லி, அக் 6

மேற்குப் பஞ்சாப்பிலுள்ள செழிப்பான பிரதேசங்களிலிருந்து வெளியேறிய முஸ்லிமல்லாத அகதிகள் 75 மைல் நீளமுள்ள அணிவரிசையில் பாக்கிஸதானிலிருந்து இன்று இந்தியாவுக்குள் பிரவேசித்தார்கள். உலகச் சரித்திரத்திலேயே கூட்டக்குடியேற்றம் இவ்வளவு அதிகமான அளவில் நிகழ்ந்ததில்லை. அவ்வளவு பேர்களும் கிழக்குப் பஞ்சாப்புக்குள் வர இரண்டு மூன்று தினங்களாகும். அதன் பிறகு அவர்களைக் குடியேற்றுவதான பெரும் பொறுப்பு வாய்ந்த வேலைகள் நடைபெறும். இவர்களுக்கு இந்தியாவிலிருந்து ஆகாயமார்க்கமாக உணவுகளும் வைத்திய வசதிகளும் அனுப்பப்பட்டன. குடியேற்ற யாத்திரை அணிவரிசை வகுக்க 8 நாட்கள் பிடித்தன. இதில்கடைக்காரர்கள், தொழில் நிபுணர்கள் டாக்டர்கள், லாயர்கள், பெரிய நிலச் சுவான்தார்கள் முதலியோர் இருக்கின்றனர்.

டில்லியில் அமைதி

டில்லிமா நகரம் நேற்றிரவும் பூரண அமைதியில் ஆழ்ந்திருந்தது. எவ்வித அசம்பாவிதமான சம்பவங்களும் நிகழவில்லை.

கராச்சியில் கத்திக்குத்து

கராச்சி, அக். 6

நேற்றிரவு ரயில்வே ஸ்டேஷனில் ஒரு சீக்கிய பிரயாணி கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்.

கிழக்கு பஞ்சாபில் இருவகுப்பாருக்கிடையே ஏற்பட்ட சச்சரவில் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் 40 பேர்கள் மாண்டனர். பலர் காயமடைந்தனர்.

மைசூர் அரசியல் கைதிகள் விடுதலை

பெங்களூர், அக். 6

மைசூர் சமஸ்தான காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் அனைவரையும் விடுதலைசெய்ய மைசூர் சர்க்கார் முடிவுசெய்தனர்.

இஸமே லண்டன் போய்ச் சேர்ந்தார்

லண்டன், அக். 6

இந்தியா கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனின் பிரதம ஆலோசகர் லார்டு இஸமே இன்று லண்டன் வந்து சேர்ந்தார். அவர் பிரிட்டிஷ் மந்திரி சபை அங்கத்தினர்களைச் சந்தித்து இந்தியாவிலுள்ள நிலைமை பற்றித் தெரிவிப்பார். அவர் இன்னும் பத்து நாட்களில் இந்தியா திரும்புவார். பத்திரிகை நிருபர்களிடம் அவர் எதுவும் சொல்ல மறுத்துவிட்டார்.

பெண்ணிடம் தகாத நடத்தை

எதிரிக்குப் பிரம்படியும் சிறைத் தண்டனையும்

மட்டக்களப்பு, அக். 6

இருபத்திரண்டு வயது வாலிபனான உசுமா லெப்பை சலவைத் தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக மட்டக்களப்பு நீதிபதி பி. சிறீஸ கந்தராஜா முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டார்.

சம்பவம் நடந்தபோது குறித்த பெண் சமையற்கட்டில் தனியே இருந்ததாகக் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் ஆறு பிரம்படியும் 3 மாதக் கடுமியச் சிறைத் தண்டனையும் எதிரி உசுமா லெப்பைக்கு விதிக்கப்பட்டது.

உலக அரசியலில் ஒரு பெரும் அதிர்ச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ள கடிதத்தில் அவர் திருமாக்னிலைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்

சோவியத் ரஷியா எக்காலத்திலும் உலக அமைதிக்காகவே பாடுபடுகிறதென்றும் உண்மை நிலைமைகளை ஆராய்ந்து அறியாமல் தகராறு விளைவிக்கும் முறையில் மாக்னில் பேசியது தவறு என்பதை மார்ஷர் தனது கடிதத்தில் விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ரஷிய பிரதிநிதி எச்சரிக்கை

நியூயார்க், அக். 6

நேற்று ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் ரஷிய பிரதிநிதி விஷின்ஸகி பின்வருமாறு எச்சரிக்கை செய்தார்:-

கிரேக்க பிரச்னை எல்லைப்புற சம்பவங்களை மட்டும் பொறுத்ததல்ல. உலக நிலையைப் பாதிக்கும் ஒரு பிரச்னையாகும். இப்பிரச்னையை முடிவு செய்வதில் தான் உலக சமாதானம் பொறுத்திருக்கிறது. எல்லாக் குற்றங்களும் கிரேக்க சர்க்காரையே சார்ந்ததாகும். கிரீஸிலிருந்து எல்லா அந்நிய துருப்புகளும் வெளியேற வேண்டும்.

பிரிட்டனுக்கு எச்சரிக்கை

மாஸகோ, அக். 6

பாலஸதீனத்தில் பிரிட்டன் அனுஷ்டிக்கும் கொள்கையை 'பிரவடா' பத்திரிகை டலமாகத் தாக்கிஎழுதியிருக்கிறது:-பொதுவாக உலகில் ஏகாதிபத்தியங்கள் தங்கள் குடியேற்ற நாடுகளிலிருந்து எவ்விதம் ஒட்டம் பிடிக்கின்றனவோ அதுபோன்றே பிரிட்டன் பாலஸதீனத்தை தனக்கு நிர்வகிக்க சக்தியின்றி கை நழுவவிடப் பார்க்கிறது. டாலருக்குஆசைப்பட்டு பாலஸதீனத்தை பிரிட்டன் அமெரிக்காவுக்கு அடகு வைக்க முயல்கிறது. 30 வருடமாக பாலஸதீனத்தில் பிரிட்டன் ஆட்சி நடத்தியும் அங்கு நிலைமையை சமாளிக்க பிரிட்டனுக்கு சக்தியற்றுப்போய்விட்டது. ஜனங்கள் ரத்தம் சிந்துப்படியாக பிரிட்டன் செய்த நிர்வாக ஊழல்கள் பகிரங்கமாகும் பொருட்டு அது இவ்விவகாரத்தை ஐக்கிய தேச ஸதாபனத்திடம் ஒப்படைத்துவிட்டு ஓடிப்போக முயல்கிறது.

போலந்து மகாநாடுபற்றி அபிப்பிராயம்

லண்டன், அக். 6

பெல்கிரேடில் சர்வதேச கமியூனிஸட் தகவல் ஸதாபனம் நிறுவியிருப்பதானது, உலகக் கமியூனிஸடுகள் தங்கள் அரசியல் எதிரிகளை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கமேயாகும் என்று இங்கு கருதப்படுகிறது. உலகின் பல தலைநகரங்களிலும் இதே அபிப்பிராயந்தான் ஏற்பட்டிருக்கிறது. ஐக்கியதேச ஸ்தாபன வட்டாரத்தில், யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட முதன் முதலான முக்கிய அரசியல் அதிர்ச்சியென இச்சம்பவத்தைக் கருதுகிறார்கள் இது ஓர் அரசியல் யுத்தப் பிரகடனம் என்றும் பிரான்ஸ் கூறியதுபோல பிரான்ஸையும் இத்தாலியையும் சோவியத் விழுங்கிவிடுமென்றும் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை எழுதுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் வல்லரசுகளின் ஓதுதுழைப்புக்கு உலை வைத்து விட்டது என்று பிரிட்டிஷ் அந்நியநாட்டுக் காரியாலய பிரதிநிதி தெரிவித்தார் ஐக்கியதேச ஸதாபன வட்டாரங்களில் இந்த சர்வதேச கமியூனிஸ்ட் ஸ்தாபனம் நிறுவப்பட்டது பெரும் கலவரத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ரஷியா கூடிய சீக்கிரம் ஐக்கியதேச ஸதாபனத்திலிருந்து வெளியேறி விடும் என்று சிலர் கருதுகிறார்கள். ஜெர்மனியைப் பற்றி நான்கு மந்திரிகள் மகாநாட்டில் ரஷியா ஒதுக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சி ரஷியா இவ்வித நடவடிக்கையை முன் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டிருக்கிறதென பிரான்ஸில் கருதப்படுகிறது.

நேற்றைய செய்தி வெளியான பிறகு சோவியத் பத்திரிகைகள் கொரியாவில் அமெரிக்காவின் கொள்கையையும் பாலஸதீனத்தில் பிரிட்டன் கொள்கையையும் பலமாகத் தாக்கி எழுதியிருக்கின்றன.

(ராய்ட்டர்)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 3-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரோ மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

கதம்பைக் கயிறு

இந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota.
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org